ஈழத்து தமிழ்க் கலைஞர்கள்

இசை, நடனம், நாடகம், ஓவியம், வாத்தியம்,
சிற்பம், கூத்து, சினிமா, கலைஞர்கள்–2000

கலாபூஷணம்
எஸ். சிவானந்தராஜா

2018



"KALAI [illegible]ANAM"
K.S.S[illegible] VIDYALAYAH
RECORDED [illegible] PRINCIPAL
ALIYAPALAYAM ROAD
KOKUVIL WEST
04/03/2020

வட இலங்கைச் சங்கீத சபை
උතුරු ලංකා පෙරදිග සංගීත සංගමය
NORTH CEYLON ORIENTAL MUSIC SOCIETY
www.ncoms.lk
Your No.
My No. NCOMS/ZEO/JF/BUILD/01/04
Date: 27.12.2018

வாழ்த்துச் செய்தி

"கலாவித்தகர்", "கலாபூணம்" எஸ் சிவானந்தராஜா அவர்களினால் வெளியிடப்படும் "ஈழத்து தமிழ்க் கலைஞர்கள்" என்ற நூலை வெளியிடுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். நாடு பூராகவும் உள்ள நடனம், இசைத்துறை, மிருதங்கம், நாடகம் ஓவியம், சிற்பம், திரைப்படம் உட்பட சுமார் 1700 கலைஞர்களின் பெயர் விபரங்கள் இந் நூலில் அடக்கப்பட்டுள்ளதை வட இலங்கை சங்கீத சபை பாராட்டுகிறது. இவ் ஆவணங்கள் கலை உலகிற்கு பெரும் சொத்தாகவும், ஆய்வுக் கட்டுரைகளை உருவாக்குபவர்களுக்கு பெரும் வழிகாட்டியாகவும் அமையும். இந் நூலை ஆக்கிய எஸ் சிவானந்தராஜா அவர்களுக்கு வட இலங்கை சங்கீத சபை சார்பாக ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

பி. எஸ். சுதர்சன்
செயலாளர்
வட இலங்கைச் சங்கீத சபை

செயலாளர்,
வட இலங்கை சங்கீத சபை
சி.கே.சிவஞானம் வீதி,
மருதனார்மடம், சுன்னாகம்.

உ

முன்னுரை

காலம் காலமாக கலைஞர்கள் உருவாகின்றனர் குரு சிஷ்ய முறையில் பயின்றவர்களும், தற்காலத்து நிறுவனக் கல்வி மூலம் பயிற்சி பெற்றவர்களும், தாம் கற்ற கலையை பயிற்றுவிப்பவர்களாகவும், ஆற்றுகை செய்பவர்களாகவும் பிரகாசிக்கின்றனர். இவர்களில் சிலர் கலை மன்றங்களமைத்து, கலை வளர்ச்சிக்கு புத்துயிரளித்து வருகின்றனர். சிலர் தமது கலைத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, உயரிய பட்டங்களைப் பெற்று, கலைத் துறையில் பேரெழுச்சி பெறச் செய்கின்றார்கள். கலைத்துறையைப் பயின்ற பலர், வறுமையின் காரணமாகவோ, உரிய ஆசிரியரின்றியோபரிதவித்து கலாபிமானிகளாக உள்ளனர் இவர்களனைவரும் கலை வளர்ச்சியின் பங்காளிகளே.

கலைஞர்களை அவர்களின் கலைத்துறையை அனுசரித்து இனங்காணும் முயற்சியில், எனக்குக் கிடைத்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், கலைவிழா விளம்பரங்கள், மூலம் பெற்ற தகவல்களைக் கொண்டு ஈடுபட்டேன். இத் தகவல்கள் மூலம் சுமார் 1600 கலைஞர்களை இனங்கண்டேன் இவர்களில் மூத்த இளம் கலைஞர்களும் அடங்குவர். ஆனால் எனக்குக் கிடைக்காத பல ஆயிரம் கலைஞர்களை உள்ளடக்க, உங்கள் உதவியே தேவைப்படுகின்றது. எனது முயற்சி ஓர் ஆரம்பமே. என்னைப்போல், பலர் இம் முயற்சியில் ஈடுபட்டிருந்தால், தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

இக் கலைஞர்கள் பற்றிய தகவல்களை, எமது எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்க நடவடிக்கைகளை யாவரும் மேற்கொள்ள வேண்டும். கலைஞர்களின் நிழற்படங்கள், ஆற்றுகைப்படங்கள், சுயவிபரக் குறிப்புக்கள், பெற்ற கௌரவப் பட்டங்கள், கௌரவிப்பு மலர்கள் இருப்பின், தயவு செய்து தந்துதவவும். கலை வளர்ச்சியில் பங்கு கொள்ளும் அரச நிறுவனங்களான நுண்கலை, அழகியற் பீடங்கள், கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி சாலைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் தமது கலைத்துறை வெளியீடுகளை தந்துதவ முடியும். இது எனது தாழ்வான வேண்டுகோள்.

நன்றி.

01.12.2018 கலாபூஷணம், எஸ். சிவானந்தராஜா

நூலின் பெயர் :- ஈழத்து தமிழ்க் கலைஞர்கள்

நூலாசிரியர்கள் :- எஸ்.சிவானந்தராஜா

இந்துக்கல்லூரி வீதி

செட்டிகுறிச்சி,

பண்டத்தரிப்பு.

உரிமை :- நூலாசிரியருக்கு

பதிப்பு :- டிசம்பர் 2018

விலை :- ரூபா 250/=

ISBN :- 978-955-38461-2-9

பொருளடக்கம்

வாழ்த்துரை	i
முன்னுரை	ii
நூலின் விபரம்	iii
பொருளடக்கம்	iv
1.கலை (பொது)	01
2.கலைகளும் எழுத்தாளர்களும்	03
3.அ.கலைகள் தொடர்பாக எழுதிய எழுத்தாளர்கள்	06
ஆ.கலைஞர்கள் தொடர்பாக எழுதிய எழுத்தாளர்கள்	06
இ.நாடகம் கூத்து தொடர்பாக எழுதிய எழுத்தாளர்கள்	07
ஈ.இசை பற்றிய நூல்களை எழுதிய எழுத்தாளர்கள்	09
உ.ஈழத்து வாக்கேயகாரர்கள்	10
ஊ.ஈழத்து வாக்கேயகாரர்கள் சிலரின் ஆக்கங்கள்	11
எ.இசைக்கருவிகள் பற்றி எழுதிய எழுத்தாளர்கள்	12
ஏ.பரதநாட்டியம் பற்றி எழுதிய எழுத்தாளர்கள்	13
ஐ.சிற்ப-ஓவிய-சித்திர எழுத்தாளர்கள்	13
4. இலங்கையின் கலை வளர்ச்சிக்கு ஏனைய நாடுகளின் பங்களிப்பு	14
5. இலங்கை வானொலியின் ஒலிபரப்பு	16
6. கலைஞர்களை இனங்காணுதல்	18
7. இசையமைப்பாளர்கள்	19
8. இசைச் சொற்பொழிவாளர்கள்	21
9. ஹார்மோனியக் கலைஞர்கள்	23
10. வில்லிசைக் கலைஞர்கள்	25
11. வீணையிசைக் கலைஞர்கள்	27
12. புல்லாங்குழல் இசைக்கலைஞர்கள்	30
13. வாய்ப்பாட்டிசைக் கலைஞர்கள்	32
14. வயலின் இசைக் கலைஞர்கள்	47
15. மிருதங்க இசைக்கலைஞர்கள்	51
16. நாதஸ்வரக் கலைஞர்கள்	55
17. தவில் இசைக்கலைஞர்கள்	62
18.ஏனைய இசைக் கருவிகள்	68
19. மெல்லிசைப் பாடகர்கள்	71
20. இசை நாடக கூத்து கலைஞர்கள்	73
21. நாடகக் கலைஞர்கள்	74
22. சிற்பாசிரியர்கள்	83
23. ஓவியக் கலைஞர்கள்	85
25. திரைப்படக் கலைஞர்கள்	86
26. நடன - நாட்டியக் கலைஞர்கள்	94

1. கலை (வாது)

காலத்தால் அழியாத கலைஞர்களின் ஆற்றுகைகள் படைப்புக்கள், வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு வழிகாட்டியாகவும், ஆராய்ச்சியாளர்களுக்கு ஆவணங்களாகவும், பதிவுகளாகவும் இருக்கின்றன. குரு - சிஷ்ய பரம்பரையில் வளர்க்கப்படும் கலைகள், இன்றும் தனித்துவம் மிக்கதாக பிரகாசிக்கின்றன. ஒலி ஒளிச் சாதனங்களின் உதவியும், கலைப்படைப்புகள் மக்கள் மத்தியில் பதிவதற்கும், மீண்டும் அவற்றை பார்ப்பதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துகின்றன.

கலைஞர்கள் யாவரும் திறமையுள்ளவர்களாகவும், தனித்துவம் மிக்கவர்களாகவும் இருப்பினும், நகரங்களில் வாழ்பவர்களுக்கு சந்தர்பங்கள் கூடுதலாகவும், கிராமங்களில் வாழ்பவர்களுக்கு சந்தர்ப்பங்கள் குறைவாகவும் கிடைக்கின்றன. மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க கலைஞர்கள் பிழைத்துக் கொள்கின்றனர். நல்ல கலைத்துறை பதவியில் உள்ளவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல, ஏனைய கலைஞர்கள் பட்டை தீட்டப்படாத வர்களாகவே காணப்படுகின்றனர். மக்கள் இவர்களை இனங்கண்டு கலைஞர்களின் ஆற்றுகைகளுக்கும் படைப்புக்களுக்கும் ஊக்கம் தருதல் வேண்டும்.

"கலையே வாழ்வு" என கலைக்காக தம் வாழ்வை அர்ப்பணிப்பவர்கள் அழியா புகழைப் பெறுகின்றனர். நிறுவனங்களில் கலைத்துறைப் பணியைச் செய்பவர்களின் திறமைகள், அவர்கள் பணி செய்யும் நிறுவனங்களுக்கே புகழைத் தேடுகின்றன. அவர்களின் தனித்துவமான திறமைகள் கட்டுப்படுத்தப்பட்டு கிடக்கின்றன். நுண் கலைத்துறை ஆசிரியர்களின் நிலைமை இதுவே ஆனால் இவர்களின் படைப்புக்கள் இசை - நடனம் - இசை நாடகம் - ஆற்றுகைகள் ஒலி ஒளிப் பதிவுகளாக

வெளிவரும்போது நாம் மீண்டும் மீண்டும், விரும்பிய நேரம் பார்க்க முடிகின்றது. இரசிக்க முடிகின்றது. ஓவியச் சிற்பப் படைப்புக்கள் என்பன பார்ப்பதற்கும் தொட்டு உணர்வதற்கும் காட்சிப்படுத்தவும் உரியதாகின்றது.

கலைத்துறை சார்ந்த நூல்கள் பல, காலத்துக்குக் காலம் அறிஞர்களால் வெளியிடப்படுகின்றன. கலைகளைப் பாராட்டி சில பிரத்தியேக வெளியீடுகள் கூட வருகின்றன. கலைத்துறை சார்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களை சிலர் எழுதுகின்றனர். இவர்கள் கலைத்துறையை வளர்க்கின்ற, ஆவணப் படுத்துகின்ற காவலர்களாக உள்ளனர். மேலும் கலைக் காவலர்களாக கலைஞர்கள் எழுத்தாளர்கள் மட்டுமமல்ல! கலையை ரசித்து ஆததரிப்பவர்களும் உள்ளனர்.

கலைஞர்களின் கலை வளர்ச்சிக்கு கலையைப் பயிற்றுவித்த குருவின் அடிப்படைப் பயிற்சிகள் காரணமாக இருந்தாலும், சுயமாக பயின்ற கலையை மக்கள் மத்தியில்வெளிப்படுத்தும் போது, உதவுகின்ற பக்கவாத்தியக் கலைஞர்களும் அரவாது கலை வளர்ச்சிக்கும் உறுதுணையாக உள்ளனர். அன்றியும், கலைஞனுக்கு களமமைத்துக் கொடுக்கின்ற ஆர்வாலர்களுக்கும் கலைஞனது ஆற்றுகையை இரசிக்கும் ஏனையோரும் உயிர் கொடுத்து ஊக்கம் அளிக்கின்றனர்.

கலைத் துறையில், கலைஞர்களின் சாதனையாக இருப்பவைகளில், அவர்களால் உருவாக்கப்பட்ட சீடர்கள்- முக்கியமானவர்களில் வாய்ப்பாட்டு, வாத்தியம், நடனம், நாடகம், கூத்து என்பவற்றை பல அரங்கேற்றங்கள் செய்து மூத்த கலைஞன் பெருமைப்படுகின்றான். இங்கு கலையானது அடுத்த தலைமுறைக்கு, அதன் தனித்துவம் குறையாமல் கையளிக்கப்படுகின்றது.

சிற்பத்துறையில் கலையம்சங்கள் நிறைந்த தேர்கள், கோபுரங்கள், வாகனங்கள், சிலைகள் என்பவற்றை நிர்மாணித்து சிற்பாசிரியர்களும் ஓவியர்களும் தமது உன்னத பங்களிப்பைச் செய்து பெருமைய டைகின்றார்கள். இங்கு மரம், கருங்கல், உலோகம் என்பவற்றில் தத்துரூபமாக சிலைகள் செதுக்கப்பட்டிருப்பதை நாம் வருடக்கணக்காகப் பார்த்துப் பார்த்து இரசிக்க முடிகின்றது.இங்கு ஒவ்வொரு கலைஞனின் படைப்பும் உன்னதமானவை.

ஒவ்வொரு கலைஞனும் ஒரு குறிப்பிட்ட ஒரு துறையிலே புகழ் பெறுகின்றான். ஆனால் திரைப்படங்களிலே, கலைஞர்களின் படைப்புக்களை, இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகளை, எம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தி சிரிக்கவும், சிந்திக்கவும் வைப்பவர்கள் படத்தயாரிப்பாளரும், அவரோடிணைந்த நடிகர்கள், ஒப் பனையாளர் கள் , தொழில் நுட் ப வல் லுனர் கள் , இசை அமைப்பாளர்கள் பின்னணிக் குரல் கொடுப்போ யாவருமே அகும்.

2 கலைகளும் எழுத்தாளர்களும்

கலையைப் பயில்பவர்களும், பயிற்றுவிப்பவர்களும் அழகியல் உயர்ச்சிக்கு மதிப்பளித்து, கலை மரபுகளைக் கடைப்பிடித்து ஒழுக்க சீலர்களாகவும், கலைக் காவலர்களாகவும்

வாழ, பழகிக் கொள்ள வேண்டும் கலைத் துறையைப் பயின்ற பின், மூத்த கலைஞர்களுக்கு மதிப்பளித்து, அவர்களது கலை நுணுக்கங்களையும், அனுபவங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை நுணுக்கமாகவும், விரிவாகவும் ஆராய்ந்து, கலைகள், கலைஞர்கள் பற்றிய கருத்துக்கள் விமர்சனங்களை காலத்துக்கு காலம் வெளிப்படுத்தி வருபவர்கள் எழுத்தாளர்களே. கலைஞர்களுள்ளும் பலர், தமது கலை அனுபவங்களை எழுதி வருவதை நாம் காண்கின்றோம்.

கலைஞர்களையும், கலைகளையும் கருத்திற் கொண்டு, அங்கு காணப்படும் விசேட கலையம்சங்களை எழுத்துருவாக்கி, வாசகர்களின் கண்முன்னே காலம் காலமாக காட்சியளிக்க வைக்கும் கலைப் பணியை நாம் போற்றாமல் இருக்க முடியாது.

கலாயோகி ஆனந்தகுமாரசாமி (1908 - 1956) அவர்கள்

I இலங்கையின் உலோக வடிவங்கள்,

II இலங்கை இந்திய கலைகளும் கைத் தொழில் வடிவங்களும்

III கலையும் சுதேசியமும்

IV இராஜபுத்திர ஓவியங்கள்

V இந்தியக் கலைகளின் வடிவங்கள்

VI இடைக்கால சிங்களக் கலைகள்

VII இந்தியச் சிற்பி

VIII அபிநயதர்ப்பணம்

IX சிவ நடனம்

X இந்திய இந்தோனேசிய கலை வரலாறு

XI பௌத்த விக்கிரக அமைப்பு எனப் பல ஆங்கில நூல்களை எழுதியுள்ளார்.

கலைப் புலவர் க.நவரத்தினம் (1898 - 1962) அவர்கள் தென்னிந்தியச் சிற்ப வடிவங்கள், இலங்கையில் கலை வளர்ச்சி, ஆகிய நூல்களை எழுதியுள்ளனர். சுவாமி விபுலானந்தர் (1892 - 1947) அவர்கள் பண்டைத் தமிழ் யாழ் வடிவங்களை ஆராய்ந்து "யாழ் நூல்" என்கின்ற அரிய ஆராய்ச்சியை நூலாகத் தந்துள்ளார்.

இன்றும் கலைத்துறையில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள், தமது கலைத் துறையில் ஆராய்ச்சி செய்து "கலாநிதி" பட்டம் பெற்று வருவது ஓர் முன்னேற்றகரமான செயலாகும். இவர்கள் தமது "கலாநிதி" பட்டத்திற்கான ஆய்வினை தமிழகததிலேயே செய்கின்றார்கள். இலங்கையில் கலாநிதி பட்டம் பெற்றவர்களின் விபரங்கள் பின்வருமாறு.

திருமதி.ஞானாம்பிகை.குலேந்திரன் (இசை, பரதம்)
திரு.நா.வி.மு.நவரத்தினம் (பண்ணிசை)
திரு.S.K சிவபாலன் (இசை)
திருமதி.கிருஷாந்தி.இரவீந்திரா (நடனம்)
திருமதி.ஆனந்தஜோதி தர்சனன் (நடனம்)
திரு R.தர்சனன் (இசை, மருத்துவம்)
திரு.காரை.சுந்தரம்பிள்ளை (நாடகம்)
திருமதி கார்த்திகா கணேசர் (நடனம்)
ஜெயந்தினி விக்னராஜா (இசை)
சைலஜா குமாரசாமி (இசை)
திருமதி லீலாம்பிகை செல்வராஜா (நடனம்)
செல்வி.சியாமளாங்கி கருணாகரன் (இசை)
திரு.சி.மகேந்திரன் (மிருதங்கம்)
திரு தெட்சணாமூர்த்தி பிரதாபன் (இசை)
திரு S.S ஜெயசங்கர் (நாடகம்)
ஞானதாஸ் ஜெயரஞ்சனி (நாடகம்)
தாட்சாயணி பரமதேவா (நடனம்)
இவர்களைவிட, செல்வி.சுபாஜினி பத்மநாதன் இலங்கையிலே தனது ஆய்வினை மேற்கொண்டு பட்டம் பெற்றார். சில கலைஞர்கள் கௌரவ கலாநிதி பட்டங்களைப் பெற்றுள்ளார்கள் இவர்களில் திருமதி.அருந்ததி ஸ்ரீரங்கநாதன், குறிப்பிடத்தக்கவர்கள்

நுண்கலைத் துறை மாணவர்கள், பட்டப்படிப்பின் இறுதியாண்டில் கலைஞர்கள் பலரின் ஆய்வினை விரிவாகச் செய்து வருகின்றனர். இவர்களது ஆராய்ச்சிகள், எம் மத்தியில் நூலாக வெளிவரும் போது மிகுந்த வரவேற்பைப் பெறும். எனவே ஒவ்வொருவரும் தமது கலைத்துறை ஆராய்ச்சிகளை, யாவரும் சுவைக்க நூலாக்க வேண்டும்.

கலையார்வத்தால் பலர் கலைகள் தொடர்பாகவும் கலைஞர்கள் தொடர்பாகவும் ஆவணப்படுத்தக்கூடிய தகவல்களை நூல் வடிவிற் தந்து கலைக்கூக்கம் தருகின்றனர்.

3. அ. கலைகள் தொடர்பாக பொதுவாக எழுதிய எழுத்தாளர்கள் சிலர்

திரு.த.சண்முகசுந்தரம் (கலையும் மரபும்)
திரு.கா.இந்திரபாலா (இலங்கைத் திராவிடர்கள்)
திரு.கா.சிவத்தம்பி
திரு.க.நவரத்தினம் (இலங்கையில் கலை வளர்ச்சி)
திரு.K.S.சிவகுமாரன் (கலை இலக்கிய திறனாய்வு)

3.ஆ.கலைஞர்கள் பற்றி எழுதிய எழுத்தாளர்கள் சிலர்

திரு.A.S.சோமஸ்கந்தசர்மா - ஈழத்து இசை முன்னோடிகள்
.S.முருகையா - பாடிப்பறந்த குயில்கள்
மெற்றாஸ் மயில் - பரிசளிப்பு விழாவும், கலைஞர் கௌரவிப்பும் (கூத்து)
வண்ணை ஆனந்தன் - காலம் போற்றும், ஈழத்து கலைஞர்கள் 340
தவநாதன் றொபர்ட் - இசை , நாடகம், கூத்து கலைஞர்கள் 110
ஜெயம் ஜெகன் - கலைஞர்களின் பேட்டி
த.தேவதாஸ் - திரையுலக முன்னோடிகள்

பொ.பூபாலசிங்கம் - தேன் பொழுது
சி.சிவானந்தராஜா - கலையரங்கம் அன்றும் இன்றும் ,
கலைமுகங்கள் ஓர் அறிமுகம்
இ.குமாரசாமி சர்மா - சங்கீத மகான்களும், எம்மண்ணின்
கலைகளும்
மா.அருள்சந்திரன் - யாழ்ப்பாணப் பெட்டகம்)

3. இ. நாடகம் கூத்து பற்றி எழுத்தாளர்கள் சிலர்

பா.கணபதி ஐயர் - மார்க்கண்டன், வாளபிமன்)
அகளங்கன் - (இலக்கிய நாடகங்கள்)
அம்பலத்தாடிகள் - (கந்தன் கருணை)
அருணா செல்லத்துரை(நந்தி உடையார்,பண்டார வன்னியன்)

ஆ.தேவசகாயம் (இம்மானுவேல்)
ஆசீர்வாதம் (மனம்போல் மாங்கல்யம்)
பா.இரகுவரன் (பண்டைத் தமிழர் நாடகங்கள்)
ந.சிவஞான சுந்தரம் (மாதவி மடந்தை, தமயந்தி திருமணம்)
குமாரசிங்க முதலியார் (பதிவிரதை விலாசம்)
கோகிலா மகேந்திரன் (குயில்கள்)
சண்முகசுந்தரம் (பூதத்தம்பி வாழ்வு பெற்ற வல்லி)
காரை சுந்ரதம்பிள்ளை (ஈழத்து இசை நாடக வரலாறு)
குழந்தை சண்முகலிங்கம் (மண்சுமந்த மேனியர்)
க.இராமலிங்கம் (நவமணி, அசோகமாலா)
க.இராசலிங்கம் (நமச்சிவாயம்)
சுவாமி விபுலானந்தர் (மதங்க சூளாமணி)
சீ.விநாசித்தம்பிப் புலவர் (ஸ்ரீ.வள்ளிநாயகன்)
சு.வித்தியானந்தன் (நாடகம், நாட்டாரியற் சிந்தனைகள்)
(பதிப்பாசிரியர் - ஞானசௌந்தரி)
க.கணபதிப்பிள்ளை (சங்கிலியன், மாணிக்கமாலை)

கா.சிவத்தம்பி (Drama in Ancient Society.)
சி.சிவசேகரம் (சமூக விரோதி)
க.சிதம்பரநாதன் (சாவித்திரிதேவி சரிதம்)
மாத்தளை கார்த்திகேசு (களாங்கம், போராட்டம்)
N.K.ரகுநாதன் (கந்தன் கருணை)
சி.மௌனகுரு (மரபுவழி நாடகங்கள் ஒன்பது)
இ.முருகையன் (ஈழத்து தமிழ் நாடக அரங்கு, சங்கடங்கள், வெறியாட்டு)
முத்து சிவஞானம் (சேரன் சமாதி)
செ.செபமாலை (மரபு வழி நாடகங்கள்)
செம்பியன் செல்வன் (மூன்று நிலவுகள்)
முத்துக்குமாரு புலவர் (தேவசகாயம்பிள்ளை)
வை.முத்துக்குமாரசாமி (இரவீந்திரநாத்தாகூரின்நாடகங்கள்)
மரியாம்பிள்ளை (விசயமனோகரன்)
மரிசாற் புலவர் (ஞானசவுந்தரி)
செ.மெற்றாஸ் மயில் (ஆனையை அடக்கிய அரியாத்தா)
து.உருத்திரமூர்த்தி (கோடை, புதியமாதர் வீடு)
A.T பொன்னுத்துரை (இறுதிப்பரிசு, பக்தி வெள்ளமை)
இ.பாலசுந்தரம் (காத்தவராயன்)
சோ.நடராசன் (சாகுந்தலம், பொம்மை வண்டி)
நந்தி (குரங்குகள்)
சி.ந.தேவராஜன் (விஜயன் விஜயை திருமணம்)
தேவதாசன் (வித்துக்கள்)
தேவன் - (தென்னவன் பிரமராயன்)
சோமசுந்தரப்புலவர் - (உயிரிளங்குமரன்)
ச.தம்பிமுத்துப்புலவர் (எஸ்தாக்கியார்)
க.சொர்ணலிங்கம் (ஈழத்தில் நாடகமும் நானும்)
க.சொக்கலிங்கம் (சிலம்பு பிறந்தது, தெய்வப்பாவை)
சில்லையூர் செல்வராஜன் (தணியாத தாகம்)

வே.சுப்பிரமணியம் (பண்டாரவன்னியன்)
வ.ம.சூசைப்பிள்ளை (எஸ்தாக்கியர்)
ஆ.செகராசசிங்கம் (குருமணியோசவ்)
கனக. செந்திநாதன் (ஒருபிடி சோறு)
செ.நடராஜா (கன்னித்துறவு)
ஆசீர்வாதம் மு.வி. (தேவசகாயம்பிள்ளை, எஸ்தாக்கியர்)
யூதகுமாரன், கத்தரிநாள், 74 கத்தோலிக்க கூத்துக்கள்)

3. ஈ இசை பற்றிய நூல்களை வெளியிட்டோர்களில் சிலர்

நவரத்தினம் நா.வி.மு - மேலைத்தேய இசையியல்
சந்திரசேகரம். P - இசையிலக்கணம்
நடராஜஜயர்.செ.ந. - இசை நடனக் களஞ்சியம் I
ஸ்ரீகாந்தா - தமிழிசைத் தீபம்
வேலாயுதபிள்ளை.மு - சங்கீத சாஸ்திரம்
சிவபாலன்.S.K - தமிழிசை மரபு
ஞானாம்பிகை குலேந்திரன் - தெய்வத்தமிழிசை
மீரா வல்லவராயர் - இசையியல் விளக்கம் I,II,III,IV
கர்நாடக சங்கீதம் I,II,III
கிருஷ்ணவேணி மயில்வாகனம் - கர்நாடக சங்கீதம் I,II
திலகநாயகம்போல்.எஸ் - கர்நாடக சங்கீதம் I,II
சிவஞானசுந்தரம்.செ - கர்நாடக சங்கீதம் I,II,III
மலர்விழி கனகசபை - கர்நாடக சங்கீதம்
சந்திரிகா கணேஸ்வரன் - பண்ணிசைத் தேன்துளிகள்
இராஜகுமாரி சோதிநாதன் - கர்நாடக சங்கீதம்
பரமேஸ்வரன்.செ - கர்நாடக சங்கீதம்
சிவானந்தராஜா.எஸ் - இலக்கிய இசைச்சாரல்
பஞ்சரத்தின கீர்த்தனைகள்
- ஈழத்துக் கலைத்துறையின் பதிவுகள்

கலாராணி சிறீஸ்கந்தராஜா - கர்நாடக சங்கீதம்
ஜெயந்தி இரட்ணசிங்கம் - கர்நாடக சங்கீதம் (அறிமுறை.செய்முறை)
மகேஸ்வரிதேவி.N - Karnatic Music
பிரம்மஸ்ரீ. வீரமணி ஐயர் அவர்கள் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகள், இராகமாலிகைகள், நாட்டிய நாடகங்கள், இசைச் சித்திரங்கள், ஊஞ்சல்கள் பாடியுள்ளார்.

3. உ. ஈழத்து வாக்கேயகாரர்கள்

கர்நாடக இசையில் வரும் பாடல்களை, முன்னர் நேரில் கேட்டோ அல்லது கிராமபோனில் கேட்டோ நன்றாக மனதில் பதித்தவர்கள் பலர் அதே இசைக் கோலத்தில் தமது கவித்துவத்தால், பல பாடல்களை எழுதினர், அப்பாடல்களின் மேலே "குறிப்பிட்ட பாடல் மெட்டு" எனக் குறிப்பிட்டுள்ளனர். அனேகமான கூத்துப் பாடல்களில் இவ்வாறுண்டு.

உதாரணமாக:-

*"பக்திப்பாடல்கள்" - ஆக்கியோன் மு.செல்வன் மூளாய்
(1970 ஆவணி)
என்ற 13 பாடல்கள் உள்ள நூலில் முதலாவது பாடல் மெட்டு
"எப்படிப்பாடினாரோ" என்று குறிப்பிட்டுள்ளார்கள்

*பெ.சு.கணபதிப்பிள்ளை வரதராஜப்பெருமான் ஊஞ்சல், கீர்த்தனை

*கு.பொ.சிவகுருநாதன் - கீர்ததனை (226)

வேறு சிலர் தாம் இயற்றிய பாடல்களுக்கு, அதன் இராகம் தாளம் விபரங்களைத் தந்துள்ளனர். இவர்கள் ஓரளவு பயிற்சி பெற்றவர்கள் எனலாம்.

1. குறிப்பாக "முருகு" என்ற பெயரில் திரு.ச.முருகையா (கொழும்புத்துறை) பல இசைப்பாடல்களின் தொகுதிகளை வெளிப்படுத்தியிருந்தார். "வாரியப்பர் பாமாலை" என்ற தொகுதியில் இராக தாள விபரத்துடன் 125 கீர்த்தனைகள் உண்டு.

2. கீதாஞ்சலி - சோ.செல்லையா குருக்கள்
3. யோகர் சுவாமிகள் - நற்சிந்தனைப்பாடல்கள்
4. நாமகள் இசைஞானம் பொன் ஏடு - சரஸகலாமணி

ஆனால் இன்னும் சிலர், குறிப்பிட்ட பாடல்களின் வரிகளுக்கு ஸ்வர சாகித்யமாக, அதன் வர்ணமெட்டைக் குறிப்பிட்டுள்ளனர். இன்னும் இவர்கள் கீதம், வர்ணம், கிருதிகள் என உருப்படி வகைகளைச் செய்து அவற்றைப் பாடியோ அல்லது மாணவர்கட்கு சொல்லிக்கொடுத்தோ நல்ல உருப்படி வகைகளை பிரபல்யப்படுத்தி யுள்ளார்.

இன்னும் சிலர், குறிப்பிட்ட உருப்படி வடிவத்தை ஆக்க, இசை தெரிந்த, மற்றொரு கலைஞர் மூலம் இராகம், தாளம் நடைகளைக் கொடுத்து பாடலுக்கு உயிரூட்டி வருகின்றனர்.

உதாரணம் :- முருகானந்தக் கீர்த்தனைகள் என்ற அண்ணாவியார் சி.கணபதிப்பிள்ளை (கலாநிதி) எழுதிய நூலின் பாடல்கள் 35ற்கும், நாதஸ்வர வித்துவான் ந.செல்லையாக் கம்பர் மேற்பார்வையிட்டு, 35 தாளத்திற்குமான பாடல்களை வெளியிட்டுள்ளார். -ஜனவரி 1960 முறைப்படி இசையைக் கற்று, பாடலின் சுவைக்கேற்ற இராக - தாள நடைகளை அமைத்து பாடல்களை பலர் இயற்றியுள்ளார்.

3. ஈழத்து வாக்கேயகாரர்கள் சிலரின் விபரங்கள்

யோகர் சுவாமிகள் - நற்சிந்தனைக் கீர்த்தனைகள்
வீரமணிஐயர் மா.த.ந. - 72 மேளகர்த்தா கீர்த்தனைகள்
திலகநாயகம் போல்.எல் - செந்தமிழ்ப் பாக்கள்
ஏரம்பமூர்த்தி A.k - கீர்த்தனை மாலை
செந்தமிழ்க் கீர்த்தனைகள்
விநாசித்தம்பி.சி. - அருளொளிக் கீர்த்தனைகள்

கனகசிங்கம்.ச. - இசை முத்துக்கள்

செந்தில்நாதன். P - கீர்த்தனை மாலை

முத்துக்குமாரசுவாமி.ப - M.M. தண்டபாணி தேசிகரின் நூற்றாண்டுக் கீர்த்தனைகள்

இராஜாமணி சிங்கராயர் - கந்தன் கீர்த்தனைகள்

3. எ. இசைக் கருவிகள் பற்றி எழுதிய எழுத்தாளர்களில் சிலர்

VEENA TUTOR - ந.மகேஸ்வரிதேவி

யாழ்நூல் - சுவாமி விபுலானந்தர்

தமிழர் யாழியல் - ச.சச்சிதானந்தம்

தமிழிசை அரங்கக் கருவிகள் - தேவகி மனோகரன்

புல்லாங்குழற் கலை - சண்முகராஜா.வே.க

விரலிசை - தவநாதன் றொபர்ட்

மிருதங்க சஞ்சீ V. செல்லத்துரை

மிருதங்க சாஸ்திரம் - சங்கரசிவம்.ம

மிருதங்க சங்கீத சாஸ்திரம் - சோமஸ்கந்தசர்மா.A.S

தமிழர் முழவியல் - மகேந்திரன்.சி

பல்லவிமாலை - சின்னையா.ப

தண்ணுமைத் தண்ணொலி - மாதவன்.நா

மிருதங்க சாஸ்திரம் I,II,III,IV - இரகுநாதன்.அ

கண்ணதாசன்.க - 35 தாள ஆவர்த்தனங்கள்

கேதீஸ்வரன்.சு - நாதஸ்வர இசை வரலாறு (ஆராய்ச்சி)

தவில்வாசம்.கி - இராமதாஸ்.க

1. வில்லிசைப் பாடல்களில் கதை, தெம்மாங்கு இசைப்பாடல், இயலிசைப் புலமை, நடிப்பு அனைத்தையும் கொண்ட ஓர் கலை, இவ்வில்லிசை பற்றி இளவாலை கலாபூஷணம் அ.செல்லத்துரை அவர்கள், 23 தலைப்புக்களில் ஓர் நூலை வெளிட்டுள்ளார்.

இராசையா ஸ்ரீதரன் - வில்லிசைப் பாட்டு.

3.ஏ பரத,நடன, நாட்டிய இசை பற்றிய எழுத்தாளர்களில் சிலர்

ஞானாம்பிகை குலேந்திரன் – பழந்தமிழர் ஆடலில் இசை
பரத இசை மரபு

சுபாஷினி பத்மநாதன் – "நாட்டியக்கலை"
"அருங்கலை நாட்டியக்கலை"

சிவசாமி.வி. – "பரதக்கலை"
"சமஸ்கிருத நாட்டிய மஞ்சரி"
"நாட்டிய சாஸ்திர மரபு"

சபா.ஜெயராசா – இசையும் நடனமும்
– ஆடல் அழகியல்"

லீலாம்பிகை செல்வராஜா – "நடனசாரம்

கார்த்திகா கணேசர் – காலந்தோறும் நாட்டியக்கலை

யசோதா விவேகானந்தன் – பரத நாட்டியம்

சுபாதினி தயாபரன் – கலையமுது

(பாடசாலை மட்டத்தில் பயில்வதற்கான தரம்வாய்ந்த பல நடன நூல்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கவை ஆகும்)

3. ஐ. சிற்ப ஓவிய சித்திர எழுத்தாளர்களிற் சிலர்

நவரத்தினம்.க – தென்னிந்திய சிற்ப வடிவங்கள் இந்திய ஓவியங்கள்

தம்பித்துரை.ஆ – ஓவியக்கலை, பண்பாட்டின் மூன்று கோலங்கள்.

அம்பிகைபாகன்.வே – கலாசேரியும், தேர்ச்சிற்பக் கலையும்

கொன்ஸ்ரைன்ரன்.K.A – இருபதாம் நூற்றாண்டு ஓவியங்கலை,
தற்காலத்து யாழ்ப்பாண ஓவியங்கள்

நாராயணி முத்துலிங்கம் – கட்டிட சிற்ப ஓவிய வண்ணங்களின்
வரலாறு

பத்மநாதன்.சி – இந்துக் கோவில்களும் சிற்பங்களும்,
இந்து நடனங்களும், ஓவியங்களும்

யோகேஸ்வரி.சி – உலக ஓவியங்களும் சிற்பங்களும்

கலைஞர்கள் தமது கலையாற்றுகையில் ஓர் தர்மத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஆத்மீக விழாக்களில் ஆத்மீக சிந்தனைகளையே கொண்டு வரவேண்டும். விழாக்களில் இரசிகனுக்கு நல்ல செய்திகளைத் தெரிவிக்க வேண்டும். இலங்கையின் கலை வளர்ச்சியில் இலக்கிய சரித்திர ரீதியாக தமிழ் நாட்டுடன் பெரும் பங்களிப்பும் கவனத்திற்குரியது.

4.இலங்கையின் கலை வளரச்சிகளில் ஏனைய நாடுகளின் பங்களிப்பு

சிவபூமி என்றழைக்கப்படும் இலங்கையை வீணைக் கொடியுடைய இராவணன் ஆண்டு வந்தான். இவன் யாழிசை மீட்டுவதில் வல்லவன். ஒருமுறை இவன் கைலை மலையைப் பெயரதந்த போது. அம்மலையுள் அகப்பட்டான். இவன் யாழிசை மீட்டியே மலையினின்றும் விடுபட்டான்.

இராவணன் யாழைத் திருடிவந்து, சித்ரா[illegible]கதன் என்ற காந்தர்வன், கீரிமலைச்சாரலிலே யாழ் வாசிச்சு இன்புற்ற இடத்தை "வீணா கானபுரம்" என்றழைத்தனர்.

ஒருமுறை இரண்டு கண்களும் தெரியாத, கவிவீரராகவன் என்ற சோழ நாட்டு யாழ்ப்பாடியானவன், இலங்கையின் வடபால் ஆண்டு வந்த மன்னன் ஜெயதுங்க ராசன் முன்னிலையில் யாழை மீட்டி அரசனைப் புகழ்ந்து பாடினான். இதனால் மகிழ்ச்சியுற்ற அரசன் பொன், யானை பரிசில்களுடன் மணற்றிடல் ஒன்றையும் பரிசளித்தான்.

குதிரை முகங் கொண்ட சோழ இளவரசியான மாருதப்புரவீக வல்லியானவள், தனது குதிரை முகம் நீங்க இலங்கையின் வடபால் கீரிமலை புனித தீர்த்தத்தில் நீராடி, தனது குதிரைமுகம் நீங்கப பெற்றாள். இதனால் மகிழ்ச்சியுற்று பலதுறைக் கலைஞர்களுடன் வந்து மாவிட்டபுரம் முருகன் கோவிலை அமைத்து வேத - கீத- நாதம் முழாங்கிட பல கலைஞர்களை பணிக்கு அமர்த்தினாள்.

மூவேந்தர் ஆண்ட தமிழ் நாட்டினின்றும் இலங்கை மீதான படையெடுப்பால், பெரும் பகுதியை சோழர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தநர். இதனால் பல சிவன் கோவில்களை, திராவிடக் கலையம்சத்துடன் கட்டியதுடன், பல கலைஞர்களை அங்கு பணிபுரிய சேவைக்கமர்த்தினர்.

இலங்கையின் திருத்தலங்களான திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், கதிர்காமம், நல்லூர்க் கோயில்களின் மீது சம்பந்தர், அப்பர், சுந்தரர், அருணகிரிநாதர் என்போர் கவிமலர்களால் அர்ச்சித்து ஈடேறினார்.

இலங்கையை ஆண்ட போர்த்துக்கேயர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்போர் தமது தேவாலயங்களைத் தமது மரபிற்கேற்ப அமைத்து ஓர் மாற்றத்தை ஏற்படுத்தினர்.

இலங்கைக்கு புத்த மதம் பரவும் போது பௌத்த தாது கோபுரங்கள், புத்தரின் நிஷ்டையிலிருக்கின்ற, படுத்துறங்கிய நிலையிலுள்ள, நிற்கின்ற உருவங்கள் யாவும் அமைக்கப்பட்டன.

இலங்கையில் மாத்தளை மாவட்டத்திலுள்ள சிகிரியா குகை ஓவியங்கள். அதன் கட்டிட அமைப்பு, இன்றும் யாவரையும் பிரமிக்க வைக்கின்றன.

இவ்வாறு சிங்கள, கிறிஸ்தவ, இந்து பண்பாட்டு கலையம்சங்களை நாம் இலங்கையில் இன்றும் பார்க்கலாம். கலைஞர்கள் தமது கலைத்துவத்திற்காக இலங்கை வருவதும், கலைகளைக் கற்றுக் கொள்ள இலங்கையினின்றும் மக்கள் இந்தியா செல்வதும் பன்னெடுங்காலமாக நிகழ்ந்து வருகின்றது. இந்தியாவினின்றும் வந்த கலைஞர்கள் பலர், இலங்கையிலேயே தங்கி தமது வாழ்க்கையை பல பாகங்களிலும் அமைத்துக் கொண்டனர். இதன் பயனாக இந்தியாவின் பல ஊர்களின் பெயர்கள், இலங்கையிலும் அழைக்கப்படுகின்றன. கலை, கல்வி, தொழில் வாய்ப்புக்களுக்காக பலர், இலங்கையின் பல பாகங்களிலும் குடியேறி கலை மரபுகளை பாதுகாத்து வரலாயினர்.

தென்னிந்தியக் கலைஞர்களின் கலையமுதத்தை பருகிய பலரும், கலையார்வமிகுதியால் தாமும் அவ்வாறு கலைஞர்களாக வர விரும்பினர். தென்னிந்திய வானொலி ஒலிபரப்புக்கள், தென்னிந்தியத் திரைப்படங்களில் வெளியான கர்நாடக சுத்தமான இசைப்பாடல்கள், கூத்துக்களில் பாடி நடிக்கும் காட்சிகள் கண்டு பரவசப்பட்டோர,

5 இலங்கை வானொலி ஒலிபரப்பு

அக் காலப்புகுதியில் ரேடியோ சிலோன் என்ற பெயரில் சிங்களம், ஆங்கிலம், தமிழ் மூன்று மொழியிலும் ஒரே ஒலிபரப்பே இடம்பெற்றது. உதாரணமாக 16.09.1956ல் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் பின்வருமாறு பிரசுரிக்கப்படுகின்றது.

கொழும்பு இன்று 11. 9.1956	நாளை
காலை 7.30 ஜோர்ட் பீரிஸ் - வயலின்	காலை 7.30 புல்லாங்குழல்
8.00 பி.கந்தசாமிப்பிள்ளை - பாட்டு	டி.ஆர்.அழகேசன்
11.00 நேயர் விருப்பம் - இசைத்தட்டு	9.00 - காலைவழிபாடு பி.ப
12.00 சிங்களப்பாட்டு- இசைத்தட்டு	10.00 வாத்திய இசை

12.30 இந்தூஸ்தான் பாட்டு - இசைத்தட்டு
மாலை 4.00 மணி சிங்களப்பாட்டு
4.30 மாதர் பகுதி - தயாரிப்பு
செந்திற்செல்வம் ரத்னதிக்கம
5.30 சிங்களப் பாட்டு
6.00 கதாப்பிரசங்கம்-தா.பொன்னம்பலம்
7.15 சிங்களப்பாட்டு
8.00 பேச்சு "விஷக்கடி சிகிச்சை"
8.30 கே.எஸ் பரிபூரணானந்தா
9.00 ரேடியோ பேட்டி
9.30 ஒலிபரப்பு முடிவு

10.30 சிங்களப்பாட்டு
11.00 நேயர் விருப்பம்
மாலை
4.00 சிறுவர் மலர்

4.30 வாத்திய சங்கீதம்
5.15 சிங்களப்பாட்டு
5.45 பட விமர்சனம்
6.00 நாட்டிலும், நகரிலும்
6.15 கிளார்நெற் ஈசுப்பையா
7.00 மட்டக்களப்பு பேச்சு

செய்திகள்

காலை 11.45 தமிழில் செய்தி
11.55 தமிழில் அறிவிப்பு
பி.ப 1.00 சிங்களத்தில் செய்தி
1.10 சிங்களத்தில் அறிவிப்பு
மாலை 6.45 தமிழில் செய்தி
6.55 தமிழில் அறிவிப்பு
7.00 சிங்களத்தில் செய்தி
7.10 சிங்களத்தில் அறிவிப்பு

இங்கு வானொலி ஒலிபரப்புகள் கலைத் துறையை ஊக்கிவித்தது

கலைத்துறையை பயில வசதி கொண்டவர்கள் தென்னகம் சென்று பயின்றனர். பிரபல வித்துவான்களிடம் தனிப்பட்ட ரீதியிலும், கலைத்துறை நிறுவனங்களில் பயின்றும் இசை நடன ஓவியத் துறைகளில் பட்டம் பெற்றனர். 1925 - 1960 காலப்பகுதிகளில் இலங்கை வானொலியும், தரம்மிக்க கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் கொடுத்து ஊக்கம் தந்தனர்.

சிலர் வானொலியில் நேரடியாகவே பாட அவை ஒலி பரப்பப்பட்டன. படிப்படியாக இலங்கையிலும் நிறுவன ரீதியில் கலைத்துறைப் பயிற்சிகள் பெற்ற பலரும் கலைத்துறையாசிரியர்களாக அரச நிறுவனங்களில் ஆசிரியர்களாயினர். கலைத்துறை தொடர்பான அறிவினை சாஸ்திர செயல்முறைத் திட்டங்களினால் பெற்று, இலங்கையிலேயே இசை, நடனம், நாடகம், ஓவியத் துறையில் நுண்கலைப் பட்டங்கள் பெறும் அரிய வாய்ப்பினைப் பெற்ற பலர் இன்று மேலும் ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர். பலர் மூத்த கலைஞர்களாகவும், சிலர் இளங் கலைஞர்களாகவும் உள்ளனர்.

6 கலைஞர்களை இனங்காணல்

இத்தகைய பலதுறைக் கலைஞர்களையும் ஒன்று திரட்டினாலும், அவர்களை ஒரே பட்டியலில் (அகரவரிசைப்படி) தருவதே எனது நோக்கம். இவர்களை பல பிரிவுகளின் கீழ் இனங்காண உங்கள் ஒத்துழைப்பை வேண்டுகிறேன்.

1. ஒன்றிற்கு மேற்பட்ட கலையாற்றுகைகளை அல்லது கற்பித்தலில் பணியாற்றுபவர்கள்.
2. கலைப்பணியே முழு நேரமாகக் கொண்டு பணி செய்பவர்கள்.
3. கலையாற்றுகையை பகுதி நேரமாகக் கொண்டு தமது ஆர்வத்தை வெளிப்படுத்துபவர்கள்.
4. கலையாற்றுகைகளில் முன்னணியில் நின்று, கலை மன்றங்களை உருவாக்கி பல இளங் கலைஞர்களை உருவாக்குபவர்கள் அல்லது அரங்கேற்றம் செய்பவர்கள்.
5. கலைகளை முறைப்படி கற்று, ஆராய்ச்சிகள் செய்து, நூல்களை வெளியிட்டு, "கலாநிதி" பட்டங்கள் பெற்றவர்கள்.
6. சங்கீத பூஷணம், சங்கீத வித்துவான், இசைக்கலைமணி, சங்கீத ரத்தினம், கலாவித்தகர், இசைமணி, சங்கீத சிரோன்மணி, சங்கீத டிப்ளோமா, பயிற்றப்பட்ட இசை ஆசிரியர்கள் என பல்வேறு பட்டங்கள் பெற்றவர்கள்.
7. அரச நிறுவனங்களால் கௌரவிக்கபட்டவர்கள். இலங்கை கலாசார அமைச்சினால் "கலாசூரி" "கலாரத்னா" "கலாபூஷணம்" "ஆளுனர் விருது" "முதலமைச்சர் விருது"
8. கலாபிமானிகளால் அல்லது கலை நிறுவனங்களால் வழங்கப்படும் கௌரவப் பட்டங்கள்.
9. தேசிய கல்வியியற்கல்லூரி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் போன்ற நிறுவனங்கள் மூலம் கலைகளை பயிற்றுவிக்கப்பட்டு வெளியேறுபவர்கள்.
10. குறிப்பிட்ட மூத்த கலைஞரின் கீழ் பணியாற்றும் கலைஞர்கள் (சிற்பாசாரியர்கள், ஓவியர்கள் அண்ணாவிமார்கள்)

காலத்துக்குக் காலம் கலையாற்றுகைகளில் ஒலி - ஒளி ஒப்பனை - காட்சியமைப்பு நுட்பங்கள் சிறந்து விளங்குகின்றன. கலைஞர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும், தமது செயற்பாடுகளை இணையம், ஒலிநாடா, இறுவெட்டு, நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், கௌரவிப்பு மலர்கள் மூலம் செயற்பட வாய்ப்புண்டு, எனவே தாம் கற்ற கலையை முறைப்படி இளம் தலைமுறைக்கு வழங்கி, செயற்பட வேண்டியவர்களாக கலைஞர்கள் உள்ளனர்.

1. ஒரு கலைத் துறையைச் சேர்ந்தவர்கள், ஏனைய கலைத்துறையினரின் வளர்ச்சிக்கு, உரமூட்டுபவர்களாக பயனுள்ள விமர்சனங்களைக் கூறுபவர்களாக, இளங்கலைஞர்களினை ஊக்குவிப்பவர்களாக தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும். ஒரு கலைஞனின் வாழ்க்கைப் பயணம் (கலைத்தரிசனங்கள்) காலத்தினால் அழிந்துவிடாமல், அக்கலைஞனின் கலைத்துறைப் பங்களிப்பை ஆவணப்படுத்தும் வகையில் பெருமைப்படுத்தி போற்ற வேண்டும். வாழ்த்த வேண்டும், இதுவே காலத்தின் தேவை.

கலைகளைப் போற்றுவோம்
கலைஞர்களைப் போற்றுவோம்
கலையின்பத்தைப் பருகுவோம்
கலையின்பமே நிலையின்பம்

இசையமைப்பாளர் பற்றி

ஒவ்வொரு இசையமைப்பாளரும் பல இசைக் கருவிகளையும் கையாளும் திறமையுடன், பாடலின் உணர்ச்சிக்கேற்ப இசைவடிவத்தை அமைக்கிறார். பாடலின் ஆரம்ப இசை, பாடலின் முதல் வரிகள், இடை இசை பாலின், ஏனைய வரிகள்- இடையிசை என முழுமையடையும் வரை தனது திறமையை வெளிப்படுத்துகின்றார்.

இங்கு இசையமைப்பாளர் தனது கற்பனைத் திறனை முழுமையாக வெளிப்படுத்த விரும்பும் போது சில சமயம் பாடகர்களால் பாட முடியாமல் போய் விடும். மேலும் இசையமைப்பாளரின் இசை வடிவமானது, தயாரிப்பாளரின் விருப்பத்திற்கு அமையாமல் போனால், இசையமைப்பாளர் வேறொரு இசை வடிவத்தை அப்பாடலுக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

மேலும் இசையமைப்பாளரின் இசை வடிவத்தை பின்னணிக் குரல் தரும் ஆண், பெண் பாடகர்களின் ஸ்ருதி எல்லையை அறிந்த பின்னரே நிர்ணயம் செய்ய முடியும். ஒரு சமயம் பாடகர்களுக்கு இசையறிவு கூட இருப்பின், இசை வடிவத்திலும் மாற்றங்கள் செய்ய ஏற்படலாம்.

எனவே இசையமைப்பாளர் தனது தூரநோக்கோடு தயாரிப்பாளர், பாடகர்கள், கருவிகளின் எண்ணிக்கை, காட்சியில் பாடல் வரும் சந்தர்ப்பம் என்பவற்றை மனதில் கொண்டு செயற்படுகின்றார்.

திரைப்படங்களை விட பல்வேறு பாடல்களையும், தனியான (அல்பம்) வெளியீடுகளை மேற்கொண்டு, மெல்லிசைப் பாடல்கள், பக்திக் கீதங்கள் என வெளியிட்டு வருகின்றார்கள். இவை ஒவ்வொன்றும் சிறந்த படைப்புக்களாக வெளிவர, கூட்டிசைக் கருவியாளர்கள் பாடகர்கள், கவிஞர்களின் உயிரோட்டமான பாடல் வரிகள் என்பன ஆதாரமாக அமையும்.

இசையமைப்பாளர்கள்

01.அருணாசலம்.சு (அருணாகோஷ்டி) நல்லூர்
02.இரா.நீதிசாஜசர்மா கொழும்பு
03.இராஜேந்திரன் -விஜயேந்திரன் (இரட்டையர்குழு) யாழ்ப்பாணம்
04.இராஜேந்திரா இராஜேஸ்வரன் (யாழ்ரமணன்குழு) யாழ்ப்பாணம்
05.கண்ணன்.மு.(கண்ணன் கோஷ்டி) நாச்சிமார்கோவில்
06.கணேசராஜ்.எஸ் (சுப்பர் சிதாரா) கொழும்பு
07.சற்குருநாதன்.தம்பு (1942-2010) சுன்னாகம்
08.சரவணபவன்.வே.(விழிப்புலனற்றோர் குழு)யாழ்ப்பாணம்
09.சிவகுமார்.M-பிரபாகரன்.க.(அக்கினி இசைக்குழு கொழும்பு

10.செல்வச்சந்திரன்.ந. ஆனைக்கோட்டை

11.செல்வராஜ்.M.S கொழும்பு

12.துவாரகன்.T.(வானவில் இசைக்குழு) அரியாலை

13.பத்மநாபன்.T(அமரர் 2017) திருகோணமலை

நீர்வேலி

14.மண்டலேஸ்வரன் (மண்டலேஸ்வரன் இசைக்குழு)

யாழ்ப்பாணம்

15.மணிபாகவதர்.M.S.(இலங்கை வானொலி) கொழும்பு

16.மு.ஹம்மட் கௌஸ் (1910-1953)

17.முத்துசாமி.R.(இலங்கை வானொலி 1926-1988)

கொழும்பு

18.மோகன்ராஜ் .M.(அப்சராஸ் இசைக்குழு) கொழும்பு

19.ரவிச்சந்தர் (தர்சனாய் இசைக்குழு) கொழும்பு

20.லத்தீப் T.F

21.வீஸ்மானந்தா.ப (ஜங்கரன் இசைக்குழு 1977-2006)

யாழ்ப்பாணம்

22.றொக்சாமி M.K. (அமரர் -1988) கொழும்பு

23.ஹக் .M.M.A (அமரர்) கலகெதற

இசைச்சொற்பொழிவாளர்கள்

புராணங்கள்,இலக்கியங்கள் என்பவற்றில் பாண்டித்தியம் பெற்றவர்கள் தமது இசையறிவினூடாக கதாபாத்திரங்களை தனியாளாக குரலால் வெளிப்படுத்த சிறுகதைகள, பாடல்கள், கிராமிய-தெம்மாங்கு இசை என்பவற்றை மக்கள் மனதில் ஆழப்பதிக்கும் பணியில் வெற்றி காண்கின்றனர். ஒரு கதையை சிப்ளா தாளக் கருவிகளைக் கைகளில் ஏந்தி ஏனைய பக்க வாத்தியக் கலைஞர்களின் ஒத்துழைப்புடன் உரையாடலாக-கதையாக-இசைப்பாடலாக மாறி மாறி ரசனை குன்றாமல் வெளிப்படுத்தும் கலையாகும்.

கதையில் வரும் கதாபாத்திரத்திற்கேற்ப தனது குரலிசையால் பாடல்களை மீண்டும் மீண்டும் பதியச் செய்வது இவர்களின் சிறப்பு ஒரு வகையில் தனி நடிப்பை வெளிப்படுத்தி சிரிக்கவும், சிந்திக்கவும், தரும் வசன நடைகள்,பாடல்களின் இசை என்பன மக்களின் மனதில் குடிகொள்ளும்.

இவ்வகையான இசைச்சொற்பொழிவாளர்கள் இராமாயணம்,பாரதம், கந்தபுராணம், கிருஷ்ணலீலா என பலதொடர் சொற் பொழிவுகளை கோவில்களிலோ கலைவிழாக்களிலோ செய்யும் திறன் மிக்கவர்களாக காணப்படுகின்றனர்.

இவ்வாறான இசைச் சொற்பொழிவாளர்கள் அருகி வருவதற்கு காரணம் பூரண இலக்கியம், புராணம் என்பவற்றில் பாண்டித்தியம் இன்மையே எனவே தற்சமயம் உள்ள ஒரு சிலராவது புதியவர்களைத் தோற்றுவிக்க முன்வர வேண்டும்.

இசைச்சொற்பொழிவாளர்கள்

01. ஆறுமுகம் V.V.K	(அமரர்)	புங்குடுதீவு
02.இரா.சிவஅன்பு	(1939-2004)	வல்வெட்டித்துறை
03.குமாரசாமி.வ		காங்கேசன்துறை
04. குமாரசாமிப் புலவர்	(அமரர்)	கொக்குவில்
05.சங்கரசுப்பையர்	(1873-1943)	உடுவில்
06.சங்கரப்பிள்ளை.வே	(1945-1989)	விழிசிட்டி
07.சிவசண்முகமூர்த்தி..ந	(1942-2012)	தொல்புரம்
08.செல்லத்துரை.சு	(1909-1968)	கும்பிளான்

09.நாகலிங்கம்ஸ்வாமிகள் (அமரர்) சங்கானை

10.நித்தியானந்தசர்மா.வை மூளாய் /ஊரெழு

11.பொன்னம்பலம்.தா (1917-1989) அளவெட்டி

12.பொன் தெய்வேந்திரன் (1933-2012) பன்னாலை

13.மணி ஐயர் C.S.S(ஸ்வாமிநாத பரமாசாரியஸ்வாமிகள்)(1918-1981)

நல்லூர்

14.மாணிக்க தியாகராஜா (1877-1945) சுன்னாகம்

15.வடிவேல்.இ (1919-2004) திருமலை

16.விநாசித்தம்பி.சி (1923-2005) அளவெட்டி

ஹார்மோனியக் கலைஞர்கள்

இசை, நாடகம், கூத்து, பஜனை என்ற இசைவடிவங்களில் ஹார்மோனியக் கலைஞர்களின் பங்களிப்பே முக்கியமாகும். இவ்வாறான கலைஞர்கள் ஹார்மோனியம் வாசிப்பதுடன் பிரதான மேடை நடிகரின் பாட்டுக்கு பக்கப்பாட்டுப் பாடிச் சிறப்பிக்கும் கலைஞர்களாக காணப்படுவது சிறப்பம்சமாகும்.

மேடையிலோ,அரங்கத்திலோ காட்சி ஆரம்பிப்பதற்கு முன்னர் வெளிப்படுத்தப்படும் இசையின் நடையானது, மேடை நநடிகர்களின் பாடலுக்கேற்ற கால்நடைக்கும்,கையசைவுக்கும் கட்டியம் சொல்வதாக அமையும் அன்றியும் காட்சி மாற்றத்தின் போது செய்ய வேண்டிய அரங்க அமைப்பு மாற்றங்களுக்கான செய்கைகளுக்கும் தொடர்ந்து வரும் நடிக நடிகரின் பங்களிப்புக்கும், தோற்றப்பாட்டிற்கும் ஒத்திசைவாக அமையும்.

மேடைப் பாடகர்களின் வடமோடி தென்மோடிப் பாடல்களையும் தங்குதடையின்றிப்பாட இவர்களின் ஒத்திகைகள் உதவியாக இருக்கும் நடிகர்களின் வருகைக்கான காலதாமதம் பாட்டு வரிகள் மறந்தாலும் அவற்றை சீர்செய்து பார்வையாளர்களைக் கட்டிப்போடும் இசை வல்லமையும் இவர்களுக்குண்டு.

எனவே நாடகம்,கூத்து என்பவற்றில் முழுநேர ஊழியனாக கடமையாற்றும் கலைஞனாக ஹார்மோனியக் கலைஞர்கள் விளங்குகின்றனர்.

ஹார்மோனியக் கலைஞர்கள்

01.அந்தோனிப்பிள்ளை பிலிப் (1919-1985)	அச்சுவேலி
02.அருந்தவநாதன்.எ	யாழ்ப்பாணம்
03.கனகு.அரியரத்தினம்	கோண்டாவில்
04.குமாரசாமி.ஆ	கரவெட்டி
05.கேசவராசா.சி	அரியாலை
06.சடாட்சரம்.மு	மூளாய்
07.சரவணமுத்து	இணுவில்
08.சற்குருநாதன் த.(அமரர்)	சுன்னாகம்
09.சாம்பசிவம்.மு (அமரர்)	மாத்தளை
10.சிவஞானம் .மு (அமரர்)	மட்டுவில்
11.சிவஞானம்.சி (1919-1983)	அளவெட்டி
12.சுந்தரம்பிள்ளை.செ	பச்சிலைப்பள்ளி
13.சோமசுந்தரம்	நல்லூர்
14.செல்லையா.சி	பளை
15.தம்பி v.s	உடப்பு
16.தவநாதன் றொபேட்	வசாவிளான்
17.திருநாவுக்கரசு.மு (அமரர்)	அரியாலை
18.தூயகுமாரன்.வே	அரியாலை
19.பஞ்சரத்தினம்.க (அமரர்)	நல்லூர்

20.பசுபதி.க (அமரர்)	சுழிபுரம்
21.பன்னிருகையன்	காரைநகர்
22.பாலசிங்கம் S. (அமரர்)	அரியாலை
23.பிலிப்.ஜோன்.கபாஸ் (அமரர்) -2013	உரும்பிராய்
24.பொன்னுச்சாமி S. (1927-1991)	கீரிமலை
25.பொன்னையா.சி	முனளியவளை
26.பொன்னுத்துரை.செ	அரியாலை
27.மரியாம்பிள்ளை	கரவெட்டி
28.மகேஸ்வரன்.சி	சுன்னாகம்
29.மரியாம்பிள்ளை (கரவெட்டி)	யாழ்ப்பாணம்
30.முத்துஸ்வாமி.R (அமரர்)	கொழும்பு
31.முருகையா.நா(1932-2013)	தொல்புரம்
32.யேசுதாசன்.M	ஆனைக்கோட்டை
33.லோகேஸ்வரன்.க	தொல்புரம்
34.வரதராஜா.பி	அரியாலை
35.விஸ்வநாதையர் .R (அமரர்)	தெல்லிப்பளை
36.வைரமுத்து.சி	ஆவரங்கால்
37.வைரமுத்து.v.v	காகேசன் துறை
38.ஜவாகர்	கொழும்பு
39.சவாஹிர்.K.M (சுப்பர் சன்ஸ்)	
40.ஜெயராஜா.C.S	ஈச்சமட்டை

வில்லிசைக் கலைஞர்கள்

வில்லிசைக் கலைஞர்கள், தமக்கே உரிய இசை வடிவத்தை தனித்தும், சேர்ந்தும் பாடுவது வழக்கம் சதங்கைகள் பூட்டப்பட்ட வில்லில் கட்டப்பட்டிருக்கும் நாணில் சிறிய கோல்களைக் கையினால் பிடித்து பாட்டின் நடைக்கேற்ப தட்டுவார்கள்.

இந்த வில்லுப் பாட்டின் மூலம் சமூக சமய இலக்கிய விடயங்களை கிராமிய மக்களும் புரியும் வண்ணம் அமைந்த பாடல்கள் பாடப்படும். மக்களின் விருப்பங்களுக்கேற்ற வகையில் இலகுவான தெரிந்த இசை மெட்டுக்கள் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

பிரதான வில்லிசை மீட்டும் கலைஞரை அனுசரித்து, ஏனையோர்கள் கதைப்பது பாடுவது மிகுந்த ரசனையுடன் காணப்படும். இதற்கு ஓர் பானையின் கழுத்தில் வில்லினைக் கட்டி, பிரதான கலைஞர் வில்லின் நாண்களில் கோல்களாலும்,ஏனையோர் பானையின் வாயில் கையாலும் பாட்டு நடைகளை வாசிப்பர்.பிரதான கலைஞருடன் மூன்று அல்லது நாலு கலைஞர்கள் வில்லிசைய வழங்கும் போது அவரது பாடல் வரிகளை திருப்பிப் படிப்பதும் கதையை ஆமோதிப்பதும் வியக்கத்தக்கதாகும்.

வில்லிசைக் கலைஞர்கள்

01.ஆறுமுகம் V.V.K (அமரர்) திருப்பூங்குடி,புங்குடுதீவு
02.கணபதிப்பிள்ளை க.நா. (1936-2015) சின்னமணி அச்சுவேலி
03.சண்முகநாதன்.தா (அமரர்) சோக்கல்லோ ஏழாலை
04.சாமபசிவ சோமஸ்கந்த சிவாச்சாரியார் - நாயன்மார்கட்டு
05.சதாசிவம்.V.V.K (அமரர்) புங்குடுதீவு
06.சபா சதாசிவம் வேலணை
07.சிவலிங்கம்.இரா மட்டக்களப்பு
08.சிறிதரன்.இரா ஸ்ரீதேவி குழுவினகர் யாழ்ப்பாணம்
09.சோமாஸ்கந்தன்.பெரி உடப்பு
10.சோமாஸ்கந்தக் குருக்கள் வேலனை

11.வடிவேலு.சு (1929-2001)	சுதுமலை
12.வடிவேலு.நா (1950-1987)	அளவெட்டி
13.லடிஸ் வீசுமணி (அமரர்)	கொழும்பு
14.ராஜன் (த.இராசு)	நாச்சிமார்கோயில்

வீணையிசைக் கலைஞர்கள்

தூய இசையை அனுபவிக்க வேடுமானால் ஓர் கலைஞன் வீணைக் கருவி இசையையே கேட்க வேண்டும். இக் கருவியில் உள்ள நான்கு மீட்கும் நரம்புகளையும், தாளம் மீட்டும் மூன்று நரம்புகளையும் சரிவர இசை கூட்டி வரும் இசையானது தன்னிகரற்றது. வீணையை சரிவர மீட்டி குரலிசை வழங்கிய பல கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் இலக்கியங்களில் நாரதர், இராவணன், கோவலன், மாதவி, சீவகன், திருநீலகண்ட யாழ்ப்பாணர் எனப் பலரும் யாழ் மீட்டிய செய்திகள் இடம் பெற்றதை நாம் உற்று நோக்கலாம். வில்யாழின் பரிணாம வளர்ச்சியே சகோடயாழ், பேரியாழ், மகரயாழ் என்பனவாகும். தற்சமயம் வீணை உருவில் நாம் பார்க்கின்றோம்.

வீணையிசையிலே மூன்று ஸ்தாயிகளிலும் இராகங்களின் வடிவை நாம் உணர முடியும். அன்றியும் ஓர் இராகத்தில் வரும் ஒவ்வொரு ஸ்வரங்களையும் ஆதாரசட்சமாகக் கொண்டு உருவாகும். கிரகபேத இராக வடிவங்களை, மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தலாம். முக்கியமாக 22 ஸ்ருதிகளின் நுட்பங்களை துல்லியமாக அறிந்து கொள்ள நாம் வீணையிசையையே மேற்கொள்ள வேண்டும்.

வீணையைக் கற்பிக்க தனியான நிறுவனங்கள் பல இருப்பினும் பல்கலைக்கழக நுண் கலைப்பீடத்தில் இசைக்கான

அடிப்படை அறிவுடன் சிறந்த பாடாந்தர நெறிகள் மூலம் நாம் பாண்டித்தியம் அடையும் இளம்கலைஞர்களை காண முடிகின்றது. ஸ்ரீ சரஸ்வதியானவள் வீணையை மீட்டுகின்ற காட்சி என்றும் நிலைத்து நிற்கின்றது.

வீணையிசைக் கலைஞர்கள்

01.அருந்ததி ஸ்ரீரங்கநாதன்	கொழும்பு
02.அருந்ததி ஸ்ரீஸ்கந்தராஜா	இலண்டன்
03.அனுஷா	
04.ஆறுமுகம்பிள்ளை.சி (1921-2000)	உடுப்பிட்டி
05.ஆரணி சிவபாதசுந்தரம்	இலண்டன்
06.இந்திரா குமாரசிவம் (பிரந்தகான பயிலகம்)	கொழும்பு
07.உதயந்தி.K	கொழும்பு
08.கல்யாணி சுதர்சன் (ஏழிசை மதுரகானசபா)	அரியாலை, கனடா
09.கனகசுந்தரம் வே.	புங்குடுதீவு, கொக்குவில்
10.கமலா கிருஸ்ணமூர்த்தி	
11.கவிதா வாமதேவன்	தெகிவளை
12.காதம்பரி மகேஸ்வரக்குருக்கள்	சுதுமலை
13.கிருஸ்ணமூரத்தி ஐயர்.R.(அமரர்)	யாழ்ப்பாணம்
14.குகனேஸ்வரிவடிவேலு	யாழ்ப்பாணம்
15.குமுதா சோமசுந்தரக் குருக்கள்	நல்லூர்
16.கோகிலத்வனி விஜயராகவன்	மாவிட்டபுரம்
17.கௌரீஸ்வரி இராஜப்பன்	கொழும்பு
18.சங்கரி இராஜேந்திரன்	யாழ்ப்பாணம்
19.சத்தியவதி ராயு	
20சத்தியசீலன்.ஆ	கொக்குவில்
21.சத்தியபாமா முத்துக்குமாரு	யாழ்ப்பாணம்
22.சரங்கிணி விஜயராகவன்	

23.சரஸ்வதி குமாரசிங்கம்(இலங்கை வானொலி) கொழும்பு
24.சங்கரி இராஜேந்திரன்
25.சாந்தா திருவாதவூரர் (அமரர்) தொல்புரம்
26.சிவசக்தி சிவணேசன்(பாரதீயவித்தியாபவன்) லண்டன்
27.சித்திராம்பரி கருணாகரன் கொழும்பு
28.சுந்தரேஸ்வரி ஜெயக்குமார் நயினாதீவு
29.சிவதாரணி சகாதேவன்(வீணாலயா)நல்லூர் லண்டன்
30.சுந்தரலட்சுமி செல்வராஜா கொழும்பு
31.சுகந்தி குகதாசன் திருமலை
32.செல்வரடணம்.இ சாவகச்சேரி
33.சோமசுந்தரக் குருக்கள் ம. இணுவில்
34.தயாபரி நிரஞ்சன் கொழும்பு
35.செந்தில்மதி பரமசிவராஜா வவுனியா
36.திலகவதி ஞானசபேசன் அளவெட்டி, லண்டன்
37.திவ்யமணி மகாலிங்கம் கொழும்பு
38.திவ்யரஞ்சனி.பே
39.நந்தினி விஜயரத்தினம்(வீணாகலாநிகேதன்) புலோலி,கொழும்பு
40.நித்தியானந்தன்.து(1941-1994) யாழ்ப்பாணம்
41.நிர்மலா சுகந்தநாதன் (அமரர்) யாழ்ப்பாணம்
42.பத்மாசனி செல்வநாயகம்
43.பாலாம்பிகை நடராசா மட்டக்களப்பு
44.மகேஸ்வரி நவரத்தினம்(அமரர்) யாழ்ப்பாணம்
45.மதுமிதா வரதராஜசர்மா மயிலணி
46.மலர்விழி கனகசபை சண்டிலிப்பாய்
47.மனோரஞ்சிதம் லோகேஸ்வரன் கொழும்பு
48.மாலினி ஸ்ரீனிவாசன் கொக்குவில்
49.மாலினி தனபாலசிங்கம்
50.ரேணுகா சிவசம்பு
51.ரேணுகா விஜயராகவன்
52.ராதை குமாரதாஸ் (இலங்கை வானொலி) கொழும்பு

53.லீலாவதி இரத்தினசிங்கம் (இலங்கை வானொலி)கொழும்பு
54.வரதவாணி.வி அளவெட்டி
55.வாசுகி இரங்கன் நல்லூர்
56.விஜயலட்சும் சண்முராசா(வீணாவிகார் இசைமன்றம்)
யாழ்ப்பாணம்
57.விதுஷா கோபிகிருஷ்ணா (சாகித்ய வீணாலய)
யாழ்ப்பாணம்
58.ரஞ்சினி ராஜேஸ்வரன்
59.ஜனனி நடேச மூர்த்தி சுழிபுரம்
60.ஸ்ரீதாஸ்.சி கொழும்பு,கனடா
61.றீற்றா ஞானதீபம் சுகந்தநாதன்(1948) அமரர் யாழ்ப்பாணம்
62.மகேஸ்வரி லோகேஸ்வரன் (இலங்கை வானொலி) கொழும்பு
63.ஜெகானந்தகுரு யாழ்ப்பாணம்

புல்லாங்குழல் இசை

கண்ணனின் குழலோசையில் ஆவினங்கள்தம்மை மறந்து ஒன்று கூடும். ஆனாயநாயனாரின் குழலிசையில் பறவைகள், விலங்குள்கள் முதல் எல்லா உயிர்களும் தமை மறந்து நிற்கும், சிலப்பதிகாரத்தில் ஆடல்வல்லான் தண்ணுமையாளன், குழலிசையாளன், மிடற்றுக்கருவியாளர் என்பவர்களின் இலக்கணங்கள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. இயற்கையாகத் தோன்றிய குழலிசையை ஆதாரமாகக் வைத்தே, ஏனைய இசைக்கருவிகள் இசை கூட்டப்பட்டன. இத்தகைய மேன்மைமிகு இசைக் கருவியை, நம்கலைஞர்கள் சிலர் முறைப்படி பயின்று, பாண்டித்தியம் பெற்று விளங்குகின்றனர். ஒவ்வொரு ஸ்ருதிக்கும் ஆதாரமான புல்லாங்குழல்கள் உள்ளன. ஒரு சில பாண்டித்தியம் பெற்ற கலைஞர்கள் ஒரு குழலிலேயே பல ஸ்ருதிகளையும் ஆதாரமாக வைத்து வாசிக்கும் திறமையுடையவர்களாய் உள்ளனர்.

இக்கருவியில் வாசிக்கும் விரலடிகளின் இனிமை, கமகங்களின் இனிமை, அதிதுரித ஸ்வரங்கள் பேசும் பிர்க்கா ரவைகள் காதுக்கு இனிமைகளையும், மனதிற்கும் தித்திப்பாகவும் இருக்கும். நாதஸ்வரம், சக்சபோன், கிளார்னெட் என்பவற்றிலும் இதே தொழில் நுட்பம் பாவிக்கபபடினும் காற்று ஊதப்படும் முறையானது நேரடியாக காற்றுத் துளையில் வாய் இதழ்களால் ஊதப்படும். அன்றியும் கருவியை பக்கவாட்டில் படித்து புல்லாங்குழல் வாசிக்கப்படும். நாதஸ்வரம், கிளார்னெட் என்பவற்றில் ஊதுவதற்காக சீவாளி என்ற பகுதியை வாயுள் செலுத்துவதும், கருவியை நேர் கீழாக வைத்திருப்பதும் வேறுபாடாகும்.

புல்லாங்குழலிசைக் கலைஞர்கள்

01.அழகேந்திரா D.R	கொழும்பு
02.அரியநாயகம்.க அமரர் (S.S செல்வநாயகம்)	அரியாலை
03.இராமசாமி ஐயர்.S (அமரர்)	கொழும்பு
04.உருத்திராபதி S.V(அமரர்)	இணுவில்
05.கமலா சதாசிவம் (இலங்கை வானொலி)	கொழும்பு
06.கெங்காதரன்.தி (அமரர்2015)	வண்ணார்பண்ணை
07.சண்முகராஜா.வே.க	அரியாலை
08.சாந்தரூப சர்மா.V	திருமலை
09.சிவசுப்பிர மணியம்.S	கட்டுவன்
10.சிவபாலரத்தினம்	கொழும்பு
11.ஞானவரதன்.பி	கொழும்பு,லண்டன்
12.தாணுநாதசர்மா.ம	இணுவில்
13.தேசிகன்.க	யாழ்ப்பாணம்
14.தேவகி விக்னேஸ்வரன்	கொழும்பு,அவுஸ்ரேலியா
15.புவனேந்திரராஜா .J	அரியாலை
16.நக்கீரன்.வை.ப	மட்டக்களப்பு

17.நமசிவாயம்.அ (1925-2013)	நல்லூர்
18.கறுப்பையா.ம	பச்சிலைப்பள்ளி
19.மூர்த்திஜயர்.R (அமரர்)	கொக்குவில்
20.வசந்தன்.இ	கோண்டாவில்
21.வசந்தகுலசிங்கம் G.S (1917-1983)	ஆனைக்கோட்டை
22.ஜேசுதாசன்.T.P (அமரர்)	கொழும்பு
23.ஸ்ரீகாந்தா.S	அமெரிக்கா,புலோலி
24.ஸ்ரீதாஸ்.S	கொழும்பு,கனடா

வாய்ப்பாட்டிசைக் கலைஞர்கள்

கருவி இசைக்கலைஞர்களுக்கு விரல்களின் மூலம் இசை வெளிப்படுத்துவது போல் குரலிசைக் கலைஞர்களுக்கு அவர்களது குரலே கருவியாகும். இக் கலைஞர்கள் நீண்ட பயிற்சியின் மூலம் சப்தஸ்வரங்களில் வரும் கோமள தீவிர பேதங்களை இனங்காண்கின்றனர் இதற்கு அப்பியாசகான உருப்படிகளான ஸ்வராளி, ஜண்டை வரிசை, மேல்ஸ்தாயி வரிசை தாட்டு வரிசை அலங்காரம், ஜதீஸ்வரம், தானவர்ணங்கள். திவ்யநாம கீர்த்தனைகள், சஞ்சாரி, கீதங்கள், இலட்சணகீதங்கள், கிருதிகள், கீர்த்தனைகள், மனோதர்மசங்கீதப் பிரிவுகளான இராகம், தானம், பல்லவி, நிரவல், கற்பனாஸ்வரம் என்பவற்றை பல வருடங்களாகப் பயிற்சி செய்யப்பட்டபின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள், 22 ஸ்ருதி நுட்பங்கள் என்பவற்றின் அறிவைக் குரலில் பயிற்சி பெற்று பின் முறைப்படி அரங்கேற்றம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்வர்.

